# காஞ்சிபுரம் பெருநகராட்சி

## கூட்ட எண். 8 / 2020-21

**2020**-ம் ஆண்டு **ஆகஸ்டு** மாதம் **31-ம் தேதி திங்கள் கிழமை மாலை 4.00** மணிக்கு நடந்த சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை**
**திருமதி.ரா. மகேஸ்வரி, பி.காம்.,**
**தனி அலுவலர்**

**1.** காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ தேவராஜ சுவாமி அருள்மிகு அத்திவரதர் சுவாமி வைபவ திருவிழாவிற்கு பொது மக்கள் நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட அடிப்படை வசதிகளுக்கான செலவினங்களுக்காக கோரப்பட்ட நிதி ஒதுக்கீடு கோரிக்கை பிரேரணையின் தொடர்ச்சியாக, அரசாணையின் (நிலை) எண்.83, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கள் (ந.நி.3) துறை, நாள்.12.08.2020–ல் இத்திருவிழாவிற்காக சாலை மற்றும் போர்வெல் போடப்பட்ட செலவினமான ரூ.3,73,80,000/–ஐ இயக்க மூலதனமானியம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான நிதியிலிருந்து (CGF O&M Filling Fund) மேற்கொள்ளவும், தற்காலிக வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் நிறுத்தப்பட்ட வாகனங்களுக்காக நகராட்சியால் வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ.17,37,600/– போக எஞ்சிய தொகை ரூ.17,45,78,000/–ஐ சிறப்பு நிதியாக வழங்க அனுமதித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.4829/2019/இ1)

**தீர்மான எண்:- 136 பதிவு செய்யப்பட்டது.**

**2.** மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.11081/2020/ஒய் நாள்.**03.08.2020**–ல் **15.08.2020** அன்று நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவினை (15.08.2020) முன்னிட்டு அவ்விழாவிற்கு வருகைதரும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தினுள் தற்காலிக கழிப்பறைகள் (Mobile Toilet) 4 எண்ணிக்கை அமைக்க அறிவுறுத்தியதின் பேரில் இப்பணிக்காக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் பின்வறுமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளி தாரர் | |
|---|---|---|---|
| | | பெயர் | தொகை ரூ. |
| 1 | மாவட்ட ஆட்சியர் வளாகத்தினுள் தற்காலிக கழிப்பறைகள் 4 Nos. அமைக்கும் பணி | SK SANITAZ Chennai – 56. | 21,240/– ( போக்குவரத்து மற்றும் GST உட்பட) |
| | | GLOBAL SANITAS SERVICES, Chennai – 77. | 23,600/– ( போக்குவரத்து மற்றும் GST உட்பட) |
| | | LEO Polymers Enter Prises, Chennai – 56. | 22,420/– (போக்குவரத்து மற்றும் GST உட்பட) |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள “M/s.SKSANITAZ, Chennai – 056” நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ)பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7084/2020/இ1)

**தீர்மான எண்:- 137** அனுமதி அளிக்கப்பட்டது.

3. காஞ்சிபுரம் பெருநகராட்சியின் பொறியில் பிரிவில் இயங்கிவரும் ஆணையாளர் பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் பதிவு எண்.TN21 AL 5848-ன் பேட்டரி (Battery) பழுதடைந்து விட்டதால் புதியதாக பேட்டரி (Battery) வாங்கி பொருத்திட ஆகும் தோராய செலவினம் ரூ.8000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. வாகன பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி நகர மன்ற அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.7731/2020/இ4)

**தீர்மான எண்:- 138 அனுமதி அளிக்கப்பட்டது**.

**4.** காஞ்சிபுரம் பெருநகராட்சியின் ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் பதிவு எண்.TN21 AL5848-ன் பேட்டரி (Battery) புதியதாக வாங்கி பொருத்திட விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணியின் விவரம் | தொகை. ரூ |
|---|---|---|---|
| 1 | Nithya Agencies, Nelukara Sttreet, Kancheepuram | பேட்டரி (Battery) புதியது விநியோகம் செய்து பொருத்துதல் | 7300/- |
| 2 | Sri Ragavendira Automobiles 81A, Nellukara Street, Kancheepuram | | 7400/- |
| 3 | Sri Sathiya Ganesh Agencies 6B, Nellukara Street, Kancheepuram | | 7600/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/S Nithya Agencies என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிடவும், பட்டியல் தொகை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7731/2020/இ4)

**தீர்மான எண்:- 139 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**5.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் சுற்றி திரியும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 14.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கிய நிறுவனங்கள் | பன்றி ஒன்றிற்கு விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | திரு. த. விஜயகுமார் | 200.00 |
| 2 | திரு. ச. மனோகரன் | 450.00 |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அனைத்து இனங்களுக்கும் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள திரு. த.விஜயகுமார், 10/56–D, ராமாபாளையம் தெரு, செங்கல்பட்டு, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திரு. த. விஜயகுமார், 10/56–D, ராமாபாளையம் தெரு, செங்கல்பட்டு, அவர்களுக்கு பணிஉத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.5207/2020/எச்1)

**தீர்மான எண்:- 140 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**6.** காஞ்சிபுரம் பெருநகராட்சி பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் கிருமி காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளிலும் உள்ள பொதுமக்கள் கூடுமிடங்களான மருத்துவமனைகள், பள்ளிகூடங்கள், கல்லூரிகள், காய்கறி சந்தைகள், உணவகங்கள், வணிக வளாகப் பகுதிகளில் லைசால் கிருமி நாசினி தெளித்து இந்நோய் பரவாமல் வைரஸ் தாக்குதலில் இருந்து தற்காத்து கொள்ளவும் சுகாதார பணிகளுக்காகவும் Lysol - 2700 லிட்டர் 12.05.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதமாக ஒரு லிட்டர் ரூ.280/- + GST (18%) வழங்கிய ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தீர்மானம் எண் 30/29.05.2020 பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி வாங்கப்பட்ட கிருமி நாசினி மருந்து பற்றாக்குறையாக உள்ளது எனவும் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருவதால் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காஞ்சிபுரம் ஆகியோர் ஆய்வுகூட்டங்களில் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்ட பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 5 முறை லைசால் தெளிக்க அறிவுறுத்தியதின் அடிப்படையில் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் தமது 06.07.2020-ம் தேதிய குறிப்பில் கேட்டுள்ளதை கருதி மேலும் 2700 லிட்டர் Lysol - வாங்கிக் கொள்ளவும், ஏற்கனவே ஒப்பந்தபுள்ளி கோரி குறைந்த விலை விகிதம் ரூ. 280/- + GST (18%) வழங்கிய திருவாளர். ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திடமே வாங்கிக் கொள்ள பணி உத்தரவு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.9.00 இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திருவாளர். ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4110/2020/எச்1)

**தீர்மான எண்:- 141 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**7.** காஞ்சிபுரம் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்கவும், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தினசரி முழு உடல் பாதுகாப்பு உடை (**PPE**) வாங்கிக் கொள்ள நகர மன்ற தீர்மான ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் 17.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதமாக முழு உடல் பாதுகாப்பு உடை (PPE) ஒன்றின் விலை ரூ. 350/- + GST (5%) தனி வழங்கிய ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தீர்மானம் எண். 8/30.04.2020 பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி வாங்கப்பட்ட முழு உடல் பாதுகாப்பு உடை (PPE) பற்றாக்குறையாக உள்ளது எனவும் மற்றும் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்ட பகுதிகளில் வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தினசரி கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருவதால் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் தமது 30.07.2020-ம் தேதிய குறிப்பில் கேட்டுள்ளதை கருதி மேலும் கூடுதலாக 1000 எண்ணிக்கையில் வாங்கிக் கொள்ளவும், ஏற்கனவே ஒப்பந்தபுள்ளி கோரி குறைந்த விலை விகிதம் ரூ. 350/- + GST (5%) வழங்கிய திருவாளர். ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திடமே வாங்கிக் கொள்ள பணி உத்தரவு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.4.00 இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திருவாளர். ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4110/2020/எச்1)

**தீர்மான எண்:- 142 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**8.** காஞ்சிபுரம் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு பணிபுரியும் நேரத்தில் கையுறை பொருத்தி கொண்டு மற்றும் முக கவசம் அணிந்து கொண்டு பணிபுரிய வேண்டி இந்நோய் பரவாமல் வைரஸ் தாக்குதலில் இருந்து தற்காத்து கொள்ளவும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய கையுறைகள் மற்றும் முக கவசங்கள் 12.05.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதமாக கையுறை ரூ.280/- + GST (18%) மற்றும் முக கவசம் ரூ.220/- + GST (18%) 750 எண்ணிக்கை வாங்கி வழங்க ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தீர்மானம் எண்.32/29.05.2020 ஒப்புதல் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி வாங்கப்பட்ட கையுறை மற்றும் முககவசங்கள் பற்றாக்குறையாக உள்ளது எனவும், வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் தமது 03.08.2020-ம் தேதிய குறிப்பில் கேட்டுள்ளதை கருதி மேலும் கையுறை 1000 எண்ணிக்கை மற்றும் 1000 எண்ணிக்கை முககவசங்கள் வாங்கிக் கொள்ளவும், ஏற்கனவே ஒப்பந்தபுள்ளி கோரி குறைந்த விலை விகிதம் ரூ. 280/- + GST (18%) கையுறை ரூ.280/- + GST (18%) மற்றும் முக கவசம் ரூ.220/- + GST (18%) 750 எண்ணிக்கை வழங்கிய திருவாளர். ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திடமே வாங்கிக் கொள்ள பணி உத்தரவு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திருவாளர். ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4109/2020/எச்1)

**தீர்மான எண்:- 143 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

9. காஞ்சிபுரம் நகராட்சியில் உள்ள 51 வார்டுகளிலும் 11728 தெரு விளக்குகள் உள்ளன. தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை V.K.கான்டிரக்டர்ஸ் என்ற தனியார் நிறுவனம் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளாக பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றது. ஓராண்டிற்கு செலவீனம்.ரூ.146.83 இலட்சம் ஆகும். இந்நிலையில் வரும் 18.09.2020-வுடன் இந்நிறுவனத்தின் பராமரிப்பு காலம் முடிவடையவுள்ளது. நகரில் உள்ள தெரு விளக்குகளை மாலையில் ஒளிரூட்டவும், காலையில் நிறுத்தம் செய்யும் பணியும் அந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வரும் மூன்றாண்டுகளுக்கு தனியார் மூலம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று உரிய கால அவகாசம் வழங்கி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ள உத்தேசமாக மூன்று மாத காலம் ஆகும். எனவே இந்த இடைப்பட்ட காலத்திற்கு தெருவிளக்குகள் ஒளிரவைக்க நிறுத்தம் செய்து பராமரிக்கும் பணிகளை தற்போது தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை கவனித்து வரும் V.K.கான்டிரக்டர்ஸ் நிறுவனத்தினரை ஏற்கனவே கடந்த ஆண்டு மன்றத்தால் அனுமதி அளிக்கப்பட்ட விலை வீதத்திலேயே மூன்று மாதத்திற்கு (19.09.2020 முதல் 18.12.2020 வரை) நீட்டிப்பு செய்து கொள்வதற்கும் மற்றும் அதற்காகும் மாத செலவீனம்.ரூ.12,22,300/- வீதம் மூன்று மாதங்களுக்கு ரூ.36,66,900/- க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5073/2017/E3)

**தீர்மான எண்:- 144 அனுமதி அளிக்கப்பட்டது**

10. காஞ்சிபுரம் பெருநகராட்சி PSK-ல் உள்ள பிரதான HT கழிவு நீரேற்றும் நிலையம் நகரின் 18 வார்டுகளில் இருந்து வரப்பெறும் கழிவு நீரை இங்கிருந்து நீரேற்றம் செய்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அனுப்பப்படுகிறது. இங்கு 75 HP - பம்பு 1-ன் கன்ரோல் ஆட்டோ டிரான்ஸ்பார்மர் ஸ்டாட்டர் மற்றும் 40HB-ன் கன்ட்ரோல் போர்டு பழுதாகி பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இவற்றை புதியதாக பொருத்தி இயக்கவேண்டியுள்ளது. மற்றும் 11 KV HT டிரான்ஸ்பார்மர் ஸ்டங்சர் காமன் AV சுவிட்சு ஆபரேட் செய்ய இயலாத நிலையில் உள்ளதை புதுப்பிக்கும், பவர் பேக்டர் அதிகரிக்க புதிய கேபாசிடர் பொருத்தவும் வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கான தோராய மதிப்பீடு.ரூ.5.00 இலட்சம் ஆகும். இப்பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7348/2020/E3)

**தீர்மான எண்:- 145 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

11. இந்நகராட்சி பாலாறு ஓரிக்கை, திருப்பாற்கடல் குடிநீர் திட்டங்களில் இருந்து பெறப்படும் குடிநீரை சுத்திகரிப்பு செய்ய பயன்படுத்தப்படும் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் வரும் ஐந்து மாதங்களுக்கு விநியோகம் செய்திடவும், இணைந்த இதன் மோட்டார் பம்பு பராமரிப்பு பணிகள் செய்திடவும் ஆகும் செலவீனம்.ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றம் தனது தீர்மானம் எண். 90 நாள், 31.07.2020-ல் அனுமதி அளித்துள்ளது. இதன் பேரில் 21.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இதன் விவரம் வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | அளவுகள் |
|---|---|---|
| 1 | ஸ்ரீராஜகணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,No.47 5-வது தெரு, சரஸ்வதி நகர், ஆவடி, சென்னை | 1 லிட்டர் பராமரிப்பு பணிகளுடன் ரூ.14.10 GST வரி தனி 0.00 Above |
| 2 | ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், 17,AGD நகர், 2-வது தெரு, ஆவடி, சென்னை | ரூ.14.00 GST வரி தனி -0.71 Less |

**அலுவலக குறிப்பு:-**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.
2. குடிநீர் சுத்திகரிப்பு பணி அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கிட நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.5073/2017/E3)

**தீர்மான எண்:- 146 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

12. காஞ்சிபுரம் பெருநகராட்சி மீத்தேன் உயிரி எரிவாயு உற்பத்தி செய்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு அங்குள்ள மோட்டார்கள், விளக்குகள் இயக்கப்பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மீத்தேன் தயாரிக்கும் கூடத்தில் உள்ள அரைவை இயந்திரம் மிக்ஸ்ட் ஆர்கானிக் வேஸ்ட் டிரிட்மெண்ட் பிளான்ட் இயக்குவதற்கான சிவேஜ் மோட்டார்கள் மற்றும் அதன் கன்ட்ரோல் பேனல் முற்றிலும் பழுதடைந்துள்ளது. எனவே இவைகளை பழுது நீக்கம் செய்யவும், புதுப்பிக்கவும் வேண்டியுள்ளது. எனவே மீத்தேன் உயிரி எரிவாயு உற்பத்தி செய்து மின்சாரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கான தோராய செலவினம் ரூ.2.75 இலட்சம் ஆகும் இப்பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.8049/2020/E3)

**தீர்மான எண்:- 147 அனுமதி அளிக்கப்பட்டது**

13. காஞ்சிபுரம் பெருநகராட்சி பாலாறு தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 45 HP வெர்டிக்கல் டர்பைன் பம்பு II அதிக அதிர்வு மற்றும் இரைச்சல் ஏற்பபட்டு இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இவை பொருத்தப்பட்டு 15 ஆண்டுகள் ஆகும். டர்பைன் பம்பு செட் II -வை கழட்டி மேலே எடுத்து அதன் காலம் பைப் 15mm Dia டபுல் பிளான்ஞ், காலம் பைப்பு ஸ்பைடர் புஸ் டிஸ்சார்ஜ் கேசிங் கன் மெடல் புஸ், பவுல் கன் மெடல் புஸ், பம்பு சாப்ட் SS சிலிவ், பம்பு சாப்ட் ரீ அலைன்மெண்ட் , போல்ட், நட் மற்றும் வாசர் மாற்றி வர்ணம் பூசி பம்பு அசம்பல் செய்து மோட்டார்வுடன் இணைத்து இயக்க வேண்டும். மேலும பம்பு - II மற்றும் பம்பு - III -ன் பேஸ் பழுதடைந்துள்ளதால் பேப்ரிகேசன் செய்து பொருத்தி மோட்டார் பம்பு இயக்க வேண்டும். இப்பணிக்கான தோராய மதிப்பீடு ரூ.3.60 இலட்சம் ஆகும் மேற்படி பணிக்கும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. நகர மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.7349/2020/E3)

**தீர்மான எண்:- 148 அனுமதி அளிக்கப்பட்டது**

**14.** காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் வாகனங்களுக்கு போதிய நிரந்தர ஓட்டுநர் பணியிடங்கள் இல்லாமையால் தற்காலிகமாக தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை பணியமர்த்திக்கொள்ள 06.08.2017 -ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

அதனடிப்படையில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர். Saffari Association, Kancheepuram நிறுவனத்திற்கு 7 எண்ணிக்கை ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அனுப்ப பணியானை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 08.08.2020 உடன் முடிவடைகிறது. எனவே பழைய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே 7 ஓட்டுநர்களை வைத்துக்கொள்ள 09.08.2020 முதல் தொடர்ந்து 89 நாட்களுக்கு காலநீட்டிப்பு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.4.50 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.3127/2017/எச்1)

**தீர்மான எண்:- 149 அனுமதி அளிக்கப்பட்டது**

15. காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் (COVID-19) நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நகராட்சிப் பகுதியை ஒட்டியுள்ள வையாவூரில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காய்கறி கடைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள், பணியாளர் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு. 15-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிக்கான செலவின விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | செலவினம் ரூ. | செ.சீ.எண். நாள் |
|---|---|---|---|---|
| 1 | வையாவூர் தற்காலிக காய்கறி மார்க்கெட், நேரு மார்க்கெட், ஓரிக்கை மார்க்கெட் மற்றும் நகரின் முக்கிய இடங்களில்பொது மக்கள் கைகளை அலம்ப தண்ணீர் வசதி செய்தல் மற்றும் தற்காலிக கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி செய்தல். | M/s AVN எண்டர்பிரைசஸ் | 4,00,000/- | 348/ 25.08.2020 |

அலுவலகக் குறிப்பு:-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.3982/2020/இ1)

**தீர்மான எண்:- 150 பதிவு செய்யப்பட்டது.**

16. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதியில், வடகிழக்கு பருவ மழை - 2020 இயற்கை இடற்பாடுகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தடுக்கும் விதமாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சறிக்கை நடவடிக்கையாக கீழ்குறிப்பிடப்பட்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது. எனவே இப்பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண். 1முதல் 13 வரை மற்றும் 21, 35, 48 முதல் 51 வரையிலான பகுதிகளில் உள்ள கால்வாய்களை JCB மற்றும் பொக்லைன் இயந்திரம் மூலம் தூர்வாரி சுத்தப்படுத்துதல். | 5.00 |
| 2 | வார்டு எண்.1 முதல் 13 வரை மற்றும் 21, 35, 48 முதல் 51 வரையிலான பகுதிகளில் பருவ மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகள் மற்றுமு பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறின்றி மழைநீர் தேங்காத வண்ணம் டீசல் இன்ஜீன் (Diesel Engine) மூலம் மழை நீரை அகற்றவும், தேவையான அளவிற்கு மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு மரங்களை தயார்நிலையில் வைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 4.00 |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.6746/2020/இ1)

**தீர்மான எண்:- 151 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

17. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இராஜாஜி மார்க்கெட்டை புதியதாக இயற்கை அழகுடன் கூடிய நவீன வசதிகள் மற்றும் வடிவமைப்புடன் கூடிய முகப்பு தோற்றத்தில் விரிவான திட்ட அறிக்கை Detailed Project Report), வரைபடங்கள் (Architectural Elevation), தொழில்நுட்ப வடிவமைப்பு (Structural Design), மதிப்பீடுகள் (Estimate) தயார் செய்தல், மதிப்பீடுகளுக்கு தொழிநுட்ப அனுமதி பெற்று பணி முடியும் வரையில் அவ்வப்பொழுது ஆய்வு செய்து தக்க ஆலோசனைகள் வழங்கி திட்டத்தினை முழுமையான வகையில் செயல்படுத்துதல் பணிக்கு தகுதி வாய்ந்த தொழில்நுட்ப ஆலோசகர் (Technical Consultants) அமைத்துக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.11.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5006/2020/இ1)

**தீர்மான எண்:- 152 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

18. காஞ்சிபுரம் பெருநகராட்சியின் வேகவதி நீரேற்று நிலையம் (S.No. 099094100130)-க்கு முன் வைப்புத் தொகை ரூ.1,34,840/-ஐ செலுத்துமாறு மின்வாரியத்திடம் இருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.7086/2020/இ3)

**தீர்மான எண்:- 153 அனுமதி அளிக்கப்பட்டது.**

19. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதி 2020-21-ன் கீழ் கீழ்க்காணம் பணிகளை மேற்கொள்ள 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண் 38 சுண்ணாம்புக்காரத் தெருவில் ஆழ்துளைக்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்புடன் கூடிய HDPE தொட்டி அமைக்கும் பணி. | 8.00 | K. கார்த்திகேயன் | | **0.07%** |
| | | | M.இளங்கோ | **0.59 %** | |
| 2 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண் 27 திருக்காலிமேடு, செளராஷ்டிரா தெருவில் ஆழ்துளைக்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்புடன் கூடிய HDPE தொட்டி அமைக்கும் பணி. | 8.00 | K. கார்த்திகேயன் | | **0.07%** |
| | | | M.இளங்கோ | **0.59 %** | |
| 3 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் எண்.27 திருக்காலிமேடு, எம்.ஜி..சக்ரபாணித் தெருவில் ஆழ்தளைக்குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்புடன் கூடிய HDPE தொட்டி அமைக்கும் பணி. | 8.00 | K. கார்த்திகேயன் | | **0.07%** |
| | | | M.இளங்கோ | **0.59 %** | |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தர்ராரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1143/2020/இ1)

**தீர்மான எண்:- 154 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

20. காஞ்சிபுரம் பெருநகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கிவரும் வாகனம் (TATA ACE) பதிவு எண் : TN21 - AF 1054 - ன் பழுதுகள் சரிசெய்து தகுதிச்சான்று புதுப்பித்திட (FC) பணிக்கு தகுதி வாய்ந்த அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளியின் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,50,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்:4150/2020/இ4)

**தீர்மான எண்:- 155 அனுமதி அளிக்கப்பட்டது.**

**21.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதி 2020-21ன் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 25.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/ திருமதி/M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண்.1 முதல் 13 வரை மற்றும் 21,35,48 முதல் 51 வரையிலான பகுதிகளில் உள்ள கால்வாய்களை JCB மற்றும் பொக்லைன் இயந்திரம் மூலம் துர்வாரி சுத்தப்படுத்துதல். | 5.00 | M.சேகர் | | 0.20% |
| | | | V.பார்த்திபன் | 2.46% | |
| 2 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண்.1 முதல் 13 வரை மற்றும் 21,35,48 முதல் 51 வரையிலான பகுதிகளில் பருவ மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறின்றி மழைநீர் தேங்கா வண்ணம் டீசல் இன்ஜீன் (Diesel Engine) மூலம் மழைநீரை அகற்றவும், தேவையான அளவிற்கு மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு மரங்களை தயார்நிலையில் வைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 4.00 | B.நீலகண்டன் | | 0.11% |
| | | | P.விஜயரகுநாதன் | 1.12% | |
| 3 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண்.22 முதல் 26 வரை, மற்றும் 43 முதல் 44 வரையிலான பகுதிகளில் உள்ள கால்வாய்களை JCB மற்றும் பொக்லைன் இயந்திரம் மூலம் துர்வாரி சுத்தப்படுத்துதல். | 9.90 | A.செல்வகுமார் | | 0.15% |
| | | | M.சேகர் | 2.33% | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண்.22 முதல் 28 வரை மற்றும் 43 முதல் 44 வரையிலான பகுதிகளில் பருவ மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறின்றி மழைநீர் தேங்கா வண்ணம் டீசல் இன்ஜீன் (Diesel Engine) மூலம் மழைநீரை அகற்றவும், தேவையான அளவிற்கு மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு மரங்களை தாயர்நிலையில் வைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 6.00 | A.செல்வகுமார் | | 0.14% |
| | | | M.சேகர் | 1.57% | |
| 5 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண்.14 முதல் 20 வரை மற்றும் 42,45,46 முதல 47 வரையிலான பகுதிகளில் உள்ள கால்வாய்களை JCB மற்றும் பொக்லைன் இயந்திரம் மூலம் துர்வாரி சுத்தப்படுத்துதல். | 9.90 | K.ரகுநாதன் | | 0,19% |
| | | | V.முகுந்தன் | 1.23% | |
| 6 | காஞ்சிபுரம் பெருநகராட்சியில் வார்டு எண்.14 முதல் 20 வரை மற்றும் 42,45,46, 47 வரையிலான பகுதிகளில் பருவ மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறின்றி மழைநீர் தேங்கா வண்ணம் டீசல் இன்ஜீன் (Diesel Engine) மூலம் மழைநீரை அகற்றவும், தேவையான அளவிற்கு மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு மரங்களை தயார்நிலையில் வைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 5.20 | B.நீலகண்டன் | | 0.11% |
| | | | P.விஜயரகுநாதன் | 1.70% | |

**அலுவலக குறிப்பு** :-

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந,க.எண்.1143/2020/இ1)

**தீர்மான எண்:- 156 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

22. காஞ்சிரபுரம் நகராட்சிக்குட்பட்ட தும்பவனம் நகராட்சி தொடக்கப்பள்ளியின் பழுதடைந்த மதில்சுவரை புதுப்பிக்கவும் மற்றும் சமயலறை பகுதியை புதுப்பிக்கவும், இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு செலவினம் ரூ.4.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5745/2020/இ1)

**தீர்மான எண்:- 157 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

23. காவல் ஆய்வாளர், பி1 சிவகாஞ்சி காவல் நிலையம், காஞ்சிபுரம் அவர்களின் 06.08.2020–ம் தேதிய கடிதத்தில் தமிழ்நாட்டில் ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ள தலைவர்களின் சிலைகளுக்கு சமூக விரோதிகளால் அவமதிப்பு மற்றும் சிலைகளை சேதப்படுத்துதல் போன்ற அசம்பாவிதங்களால் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளின் காரணமாக, சிலைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதமாக அலுவலக வளாகத்தில் உள்ள அறிஞர் அண்ணா சிலை, மகாத்மா காந்தி சிலை, காமராஜர் சிலை மற்றும் அண்ணா அரங்கத்தினுள் உள்ள அறிஞர் அண்ணா சிலைகளுக்கு இரும்பு கம்பியாலான தடுப்பு வேலி அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : –

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். **6918/2020**/இ1)

**தீர்மான எண்:- 158 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

24. காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழ் நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் 2020–21–ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள தார் சாலை பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 26.07.2020 அன்று விளம்பரம் செய்தமைக்கு ஐடியா பிராண்ட் சொலுஷன்ஸ், (Eyedea Brand Solutions) சென்னை – 34 அன்று விளம்பரம் செய்தமைக்கு அவர்களிடம் இருந்து வரப்பட்டுள்ள விளம்பர செலவினப் பட்டியல் (CGST & SGST வரிகள் உள்பட) தொகை ரூ.**1,68,315/–** (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து எட்டு ஆயிரத்து முன்னூற்று பதினைந்து மட்டும்)–ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.**5071/2020**/இ1)

**தீர்மான எண்:- 159 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**25.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீ தேவராஜ சுவாமி அருள்மிகு அத்திவரதர் வைபவ திருவிழாவிற்காக பொதுமக்கள் நலன்கருதி தேவையான அடிப்படை வசதிகளுக்காக நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான செலவினங்களுக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி முதல் கட்ட நிதி பிரேரணை ரூ.**685.60** இலட்சங்கள் மற்றும் இரண்டாம் கட்ட நிதி பிரேரணை ரூ.**1451.35** இலட்சங்கள் ஆக மொத்தம் ரூ.**2136.95** இலட்சங்களுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்பேரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை (நிலை) எண்.**83** நாள்.**12.08.2020** பத்தி எண்.**4**–ல் காஞ்சிபுரம் அருள்மிகு ஸ்ரீ தேவராஜ சுவாமி அருள்மிகு அத்திவரதர் சுவாமி வைபவ திருவிழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட சாலைகள் மற்றும் போர்வெல் போடப்பட்ட பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கான தொகை ரூ.**373.80** இலட்சங்களை இயக்க மூலதன மானியம் மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான நிதியிலிருந்து (CGF O&M Filling Fund) மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டு உள்ளது.

எனவே காஞ்சிபுரம் அருள்மிகு அத்திவரதர் வைபவ திருவிழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கான முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்ட பிரேரணையின்படி சாலை மற்றும் போர்வெல் பணிகளுக்கான விவரங்கள் பின்வறுமாறு.

**பணி விவரம்**

| வ.எண் | பணிகள் | மதிப்பீடு<br>ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| **I** | **முதல் கட்டப் பணிகள் (Phase I)** | |
| 1 | சாலைப் பணிகள் | 107.70 |
| **II** | **இரண்டாம் கட்டப் பணிகள் (Phase II)** | |
| 1 | போர்வெல் பணிகள் | 97.95 |
| 2 | சாலைப் பணிகள் | 168.15 |
| | **மொத்தம்** | **373.80** |

மேற்படி சாலை மற்றும் போர்வெல் பணிகளுக்கான தொகை ரூ.**373.80** இலட்சங்களை அரசாணையில் தெரிவித்துள்ளவாறு இயக்க மூலதன மானியம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான நிதியிலிருந்து (CGF O&M Filling Fund) நிதி ஒதுக்கீடு செய்து நிதியினை இந்நகராட்சிக்கு விடுவிக்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –**28** அவர்களுக்கு கருத்துருவினை அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.**4829/2019**/இ1)

**தீர்மான எண்:- 160 அனுமதி அளிக்கப்பட்டது**

**26.** காஞ்சிபுரம் பெருநகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக இருப்பதாலும், நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள், புதைவடிகால் பணிகள், குடிநீர் விநியோகப் பணிகள், பாலாறு ஓரிக்கை தலைமை நீரேற்று நிலையம் 5 கீ.மீ. தூரத்திலும், திருப்பாற்கடல் தலைமை நீரேற்று நிலையம் 35 கி.மீ. தூரத்திலும் இருப்பதை அலுவலர்கள் சென்று பார்வையிடுதல் மற்றும் உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்வது போன்ற அலுவலகப் பணிகளுக்கு ஏற்கனவே இந்நகராட்சி பயன்பாட்டில் இருந்துவரும் (Bolero Jeep) ஈப்பு வாகனம் TN21 F 4647ஐ வாங்கி சுமார் 16 ஆண்டுகள் முடிந்த நிலையில் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வாகனத்தை சரிவர இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே நகராட்சி பணிகளின் அவசியத்தை கருதி உடனடியாக புதிய SCORPIO வாகனம் வாங்க வேண்டியது அவசியமாகிறது. எனவே TN21 F 4647 ஈப்பு வாகனத்தை கழிவு (Condemn) செய்து, புதிய ஈப்பு வாகனம் (SCORPIO) ஒன்று நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கிடவும், மேலும் அதற்கான தோராய செலவினம் ரூ.16.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.8888/2020/இ4)**

**தீர்மான எண்:- 161 அனுமதி அளிக்கப்பட்டது**

**27.** காஞ்சிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் **2020–21–**ன் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள தெருக்களுக்கு **(**சிப்பம் III) வார்டு எண்.**3** லிங்கப்பன் தெரு, ஏகாம்பரபுரம் தெரு வார்டு எண்.**3**, சர்வதீர்த்த தென்கரை தெரு வார்டு எண்.**3**, மதுராந்தோட்டம் தெரு வார்டு எண்.**21**, ராகவேந்திரா நகர் வார்டு எண்.**51**, வள்ளளாா் நகர் வார்டு எண்.**51**, திருப்பூர் குமரன் சாலை வார்டு எண்.**51**, செவிலிமேடு மருத்துவமனை ரோடு வார்டு எண்.**50**, பள்ளிக்கூடத்தன் தெரு வார்டு எண்.**50**, எஸ்.பி. அலுவலகம் ரோடு வார்டு எண்.**48**, சின்னய்யன் நகர் வார்டு எண்.**49**, வரதப்பன் பின் தெரு வார்டு எண்.**1**, உப்பேரிகுளம் தெரு வார்டு எண்.**13**, அங்காளம்மன் கோயில் தெரு வார்டு எண்.**4** ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல்.

மேற்படி பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.**200.00** இலட்சத்தில் சாலைகள் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**9052/2019/**இ**3**, நாள்.**17.07.2020–**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சிப்பம் III –க்கான இரண்டு உறை முறையில் (Two cover system) 14.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 14.08.2020 அன்று **3.30** மணியளவில் இணையதளம் மூலம் மற்றும் இணையதளம் அல்லாத வகையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு

1) திரு.V.C. ஞானசேகரன், நெ.**5**, K.T.S. மணி தெரு, மாமல்லன் நகர், காஞ்சிபுரம்.
2) திரு. D. சந்திரபாபு, No.**18**, V.V. Koil Street, Walajabad.

இவற்றில் மேற்கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப தகுதி கணக்கிட்டு கலந்தாய்வு குழுவின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்டவற்றில் வ.எண் 1, 2—ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் உள்ளதாக பரிசீலிக்கப்பட்டதினை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு **25.08.2020** அன்று விலை விகிதம் (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகைக்கு கூடுதல் / குறைவு |
|---|---|---|
| 1. | திரு.V.C. ஞானசேகரன், நெ.5, K.T.S. மணி தெரு, மாமல்லன் நகர், காஞ்சிபுரம். | 4.97% சதவிகிதம் கூடுதல் |
| 2 | திரு. D. சந்திரபாபு, No.18, V.V. Koil Street, Walajabad. | 7.08% சதவிகிதம் கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.V.C. ஞானசேகரன் அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.97% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மீண்டும் பரிசீலித்து விலைவிகிதத்தினை இறுதி செய்ய கோரி (Negotiation) ஒப்பந்தரருக்கு **25.08.2020** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர்களின் ஊதிய (Labour) உயர்வு காரணமாக குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே திரு.V.C. ஞானசேகரன் அவர்கள் கொடுத்துள்ள விலைவிகிதம் மதிப்பீட்டை விட 4.97% கூடுதலாகவும் உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற ஒப்புதல் வரம்பிற்கு உட்பட்டதாக இருப்பதாலும், இப்பணி அரசின் சிறப்பு திட்ட பணியாகவும், குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டிய பணியானதாலும் சிறப்பினமாக கருதி மேற்படி ஒப்பந்ததாரர்களில் திரு.V.C. ஞானசேகரன் அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.97% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மன்றம் ஏற்று அனுமதி வழங்கலாம்.

2) மதிப்பீட்டினை விட கூடுதலாகும் தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5071/2020/இ1)

**தீர்மான எண்:- 162** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் **அளிக்கப்பட்டது**

**28.** காஞ்சிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2020-21-ன் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள தெருக்களுக்கு (சிப்பம் I) வார்டு எண்.46 தாண்டவராயன் நகர், வார்டு எண்.46 சின்னயன்குளம், வார்டு எண்.46 அண்ணா குடியிருப்பு, வார்டு எண்.47 ஓரிக்கை மெயின் ரோடு பின் தெரு, வார்டு எண்.47 குபேரன் நகர், தனசேகரர் தெரு, ஓரிக்கை சிவபுரம், வார்டு எண்.47 வேளிங்கப்பட்டரை அரசமர தெரு, வார்டு எண்.42 விஷ்ணு நகர், வார்டு எண்.42 முத்தாலம்மன் நகர் மற்றும் வார்டு எண்.32 எம்.எம்.அவென்யூ சாலை முதல் ஏ.கே.ஜி திருமண மண்டபம் வரை ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல்.

மேற்படி பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.200.00 இலட்சத்தில் சாலைகள் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9052/2019/இ3, நாள்.17.07.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சிப்பம் ஐ-க்கான இரண்டு உறை முறையில் (Two Cover System) 14.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 14.08.2020 அன்று 3.30 மணியளவில் இணையதளம் மூலம் மற்றும் இணையதளம் அல்லாத வகையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு

1. திரு.D.துர்வாசலு, No.1 J-Block 12th Street, அண்ணா நகர் மேற்கு, சென்னை.
2. திரு.S.நாகராஜன், தேன்பள்ளி கிராமம் அஞ்சல், வேலூர் மாவட்டம்.

இவற்றில் மேற்கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப தகுதி கணக்கிட்டு கலந்தாய்வு குழுவின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்டவற்றில் வ.எண் 1,2-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் உள்ளதாக பரிசீலிக்கப்பட்டதினை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு 25.08.2020 அன்று விலை விகிதம் (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகைக்கு கூடுதல் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.D.துர்வாசலு, No.1 J-Block 12th Street, அண்ணா நகர் மேற்கு, சென்னை. | 7.15% சதவிகிதம் கூடுதல் |
| 2 | திரு.S.நாகராஜன், தேன்பள்ளி கிராமம் அஞ்சல், வேலூர் மாவட்டம். | 4.99% சதவிகிதம் கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ளு. நாகராஜன் அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.99% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மீண்டும் பரிசீலித்து விலைவிகிதத்தினை இறுதி செய்ய கோரி (Negotiation) ஒப்பந்தரருக்கு 25.08.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிளாளர்களின் ஊதிய (Labour) உயர்வு காரணமாக குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே திரு.S.நாகராஜன் அவர்கள் கொடுத்துள்ள விலைவிகிதம் மதிப்பீட்டை விட 4.99% கூடுதலாகவும் உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :-

1) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற ஒப்புதல் வரம்பிற்கு உட்பட்டதாக இருப்பதாலும், இப்பணி அரசின் சிறப்பு திட்ட பணியாகவும், குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டிய பணியானதாலும் சிறப்பினமாக கருதி மேற்படி ஒப்பந்ததாரர்களில் திரு.S.நாகராஜன் அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.99% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மன்றம் ஏற்று அனுமதி வழங்கலாம்.
2) மதிப்பீட்டினை விட கூடுதலாகும் தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்:- 163** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் **அளிக்கப்பட்டது**

**29.** காஞ்சிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் **2020–21–ன்** கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள தெருக்களுக்கு **(சிப்பம் II)** வார்டு எண்.**24**, ரெட்டிப்பேட்டை, வார்டு எண்.**41** கூ.ஏ இரத்தினம் நகர், வார்டு எண்.**43** வாழமுனுசாமி தெரு, வார்டு எண்.**27** அருந்ததிபாளையம், வார்டு எண்.**43** திருவள்ளுவர் நகர், வார்டு எண்.**41** இராஜிவ் காந்தி நகர், வார்டு எண்.**41** பெரியார் நகர் கோவிந்தராஜன் தெரு, வார்டு எண்.**41** நத்தப்பேட்டை முருகன் நகர், வார்டு எண்.**41** நத்தப்பேட்டை குமரன் நகர், வார்டு எண்.**41** நத்தபேட்டை மாரியம்மன் கோயில் தெரு, வார்டு எண்.**41** ஆண்டாள் நகர் மற்றும் கற்பகம் அவென்யூ, வார்டு எண்.**41** நத்தப்பேட்டை கலால் ஆபிஸ் முதல் மகாலிங்கம் நகர் வரை பகுதிகளில் தார் சாலை அமைத்தல்.

மேற்படி பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.**200.00** இலட்சத்தில் சாலைகள் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**9052/2019/இ3**, நாள்.**17.07.2020–ன்**படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சிப்பம் II–க்கான இரண்டு உறை முறையில் (Two cover system) 14.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 14.08.2020 அன்று **3.30** மணியளவில் இணையதளம் மூலம் மற்றும் இணையதளம் அல்லாத வகையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு

1) திரு. N. நடராஜன், No.69B/5, கிருஷ்ணன் தெரு, பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம்.
2) M/s. MRP Infra Tech Pvt Ltd., No.4/26 A, பிள்ளையார் கோயில் தெரு, சோமங்கலம்.

இவற்றில் மேற்கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப தகுதி கணக்கிட்டு கலந்தாய்வு குழுவின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்டவற்றில் வ.எண் **1, 2–ல்** கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் உள்ளதாக பரிசீலிக்கப்பட்டதினை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு **25.08.2020** அன்று விலை விகிதம் (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீடு தொகைக்கு கூடுதல் / குறைவு** |
|---|---|---|
| 1. | திரு. N. நடராஜன், No.69B/5, கிருஷ்ணன் தெரு, பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம். | 4.98% சதவிகிதம் கூடுதல் |
| 2 | M/s. MRP Infra Tech Pvt Ltd., No.4/26 A, பிள்ளையார் கோயில் தெரு, சோமங்கலம். | 9.99% சதவிகிதம் கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.N. நடராஜன் அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.98% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மீண்டும் பரிசீலித்து விலைவிகிதத்தினை இறுதி செய்ய கோரி (Negotiation) ஒப்பந்தரருக்கு **25.08.2020** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிளாளர்களின் ஊதிய (Labour) உயர்வு காரணமாக குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே திரு.N. நடராஜன் அவர்கள் கொடுத்துள்ள விலைவிகிதம் மதிப்பீட்டை விட **4.98%** கூடுதலாகவும் உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற ஒப்புதல் வரம்பிற்கு உட்பட்டதாக இருப்பதாலும், இப்பணி அரசின் சிறப்பு திட்ட பணியாகவும், குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டிய பணியானதாலும் சிறப்பினமாக கருதி மேற்படி ஒப்பந்ததாரர்களில் திரு.N.நடராஜன் அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.98% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மன்றம் ஏற்று அனுமதி வழங்கலாம்.
2) மதிப்பீட்டினை விட கூடுதலாகும் தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5071/2020/இ1)

**தீர்மான எண்:- 164** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் **அளிக்கப்பட்டது**

**30.** காஞ்சிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் **2020–21–**ன் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள தெருக்களுக்கு (சிப்பம் IV) வார்டு எண்.**21** அண்ணா பேருந்து நிலையம் உட்புறம், வெளிபுறம் செல்லும் சாலை மற்றும் பேருந்துகள் நிற்கும் பகுதிகளில் தார் சாலை அமைத்தல்.

மேற்படி பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.**49.50** இலட்சத்தில் சாலைகள் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**9052/2019/**இ**3**, நாள்.**17.07.2020–**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சிப்பம் IV–க்கான இரண்டு உறை முறையில் (Two cover system) 14.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 14.08.2020 அன்று 3.30 மணியளவில் இணையதளம் மூலம் மற்றும் இணையதளம் அல்லாத வகையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு

1) திரு.K. சுடர்மணி, No.26A, C.S.M தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம்.
2) திரு.R. பாபு No.18 A, V.V. கோயில் தெரு, வாலாஜாபாத்

இவற்றில் மேற்கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப தகுதி கணக்கிட்டு கலந்தாய்வு குழுவின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்டவற்றில் வ.எண்.**1, 2–**ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் உள்ளதாக பரிசீலிக்கப்பட்டதினை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு **25.08.2020** அன்று விலை விகிதம் **(**Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீடு தொகைக்கு கூடுதல் / குறைவு** |
|---|---|---|
| 1 | திரு.K. சுடர்மணி, No.26A, C.S.M தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் | 4.98% சதவிகிதம் கூடுதல் |
| 2 | திரு.R. பாபு No.18 A, V.V. கோயில் தெரு, வாலாஜாபாத் | 4.96% சதவிகிதம் கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.**R.** பாபு அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.96% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மீண்டும் பரிசீலித்து விலைவிகிதத்தினை இறுதி செய்ய கோரி (Negotiation) ஒப்பந்தரருக்கு **25.08.2020** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிளாளர்களின் ஊதிய (Labour) உயர்வு காரணமாக குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே திரு.**R.** பாபு அவர்கள் கொடுத்துள்ள விலைவிகிதம் மதிப்பீட்டை விட 4.96% கூடுதலாகவும் உள்ளதை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற ஒப்புதல் வரம்பிற்கு உட்பட்டதாக இருப்பதாலும், இப்பணி அரசின் சிறப்பு திட்ட பணியாகவும், குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டிய பணியானதாலும் சிறப்பினமாக கருதி மேற்படி ஒப்பந்ததாரர்களில் திரு.**R.** பாபு அவர்கள் குறைவாக கொடுத்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.96% சதவிகிதம் கூடுதலாகவும் உள்ளதை மன்றம் ஏற்று அனுமதி வழங்கலாம்.

2) மதிப்பீட்டினை விட கூடுதலாகும் தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.**5071/2020/**இ**1**)

**தீர்மான எண்:- 165** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் **அளிக்கப்பட்டது**

**31.** இந்நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் இந்நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு, பணி கிடைக்காததால் தாங்கள் செலுத்திய முன் வைப்புத் தொகையினை (EMD) பட்டியலில் பிடித்தம் செய்த 5% காப்புத் தொகை (FSD) யினை திரும்ப வழங்குமாறு மனு செய்துள்ளார்கள். மேற்படி தொகைகள் காலம் கடந்த வைப்பு நிதியில் சேர்ந்துள்ளதால், ஒப்பந்ததாரர்களின் முன் வைப்பு மற்றும் 5% காப்புத் தொகையினை (EMD & FSD) சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி திருப்பி வழங்கி மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | EMD & FSD ரூ. |
|---|---|---|---|
| 1 | Hook Loader and Bins சப்ளை செய்தல் (FSD ) | TVS Sundram Iyengar & Sons Private Ltd. | 26,000/-<br>22,200/-<br>48,200/- |
| 2 | ஆள்வார் பங்களா சிமெண்ட் செய்தல் அமைத்தல் (FSD 5%) | M.G.சேதுராமன் | 22,500/- |
| 3 | செங்குந்தர் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | G.ஞானமுத்து | 5,500/- |
| 4 | வார்டு எண்.48 சுதர்சன் தெரு தார் சாலை அமைத்தல் | V.முகுந்தன் | 8,000/- |
| 5 | 41-வது வார்டு முருகன் குடியிருப்பு பொது கழிப்பிடம் கட்டுதல் | S.அமுதா | 8,500/- |
| 6 | 2014-15 பராமரிப்பு பணி | G.லட்சுமி | 22,000/- |
| 7 | வார்டு எண்.51, ராமசாமி நகர் குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | N.M.ராமமூர்த்தி | 6,000/- |
| 8 | நத்தபேட்டை உரகிடங்கில் Paver Block அமைத்தல் | V.புகழேந்தி | 5,500/- |
| 9 | ஏழுமலை நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | V.C.ஞானசேகரன் | 40,500/- |
| 10 | கிருஷ்ணன் தெரு தென்கோடி போர் அமைத்தல் | T.ஆறுமுகம் | 2,000/- |
| 11 | யாகசாலை மண்டபம் பள்ளி சத்துணவு பராமரிப்பு பணி | T.ஆறுமுகம் | 3,000/- |
| 12 | புண்ணிய கோட்டீஸ்வரர் கோயில் தெரு புதைவடிகால் அமைக்கும் பணி | K.ஆறுமுகம் | 1,000/- |
| 13 | 36-வது வார்டு ஆழ்துளை கிணறு அமைத்தல் | K.ஆறுமுகம் | 6,000/- |
| 14 | நத்தப்பேட்டை திடக்கழிவு மேலாண்மை உரக்கிடங்கு வளாகத்தில் ஏற்கனவே உள்ள உள்கட்டமைப்பு கட்டிடத்தில் பழுதடைந்துள்ள சிமெண்ட் தகடுகளை மாற்றி புதிய நவீன தகடுகள் அமைக்கும் பணி | K.சுடர்மணி | 7,600/- |
| 15 | நத்தப்பேட்டை குப்பை கிடங்கு வளாகத்தில் உள்ள எடைமேடை காவலர் அறை புதுப்பித்தல் | K.சுடர்மணி | 1,900/- |

| | | | |
|---|---|---|---|
| 16 | SRP – 2015–16 Package No – II (FSD 1%) | P.பாலாஜி | 2,00,000/- |
| 17 | SRP – 2015–16 Package No - II | P.பாலாஜி | 2,00,000/- |
| 18 | மஞ்சள் நீர் கால்வாயினை பொக்கிலின் இயந்திரம் மூலம் சுத்தம் செய்தல் (FSD 1%) | NPG. பிரதர்ஸ் | 5,000/- |
| 19 | மஞ்சள் நீர் கால்வாயின் திருக்காலிமேடு பொக்கிலின் இயந்திரம் மூலம் சுத்தம் செய்தல் (FSD 1%) | NPG. பிரதர்ஸ் | 2,000/- |
| 20 | 4 Wheeler Tipper (13 Nos) சப்ளை செய்தல் (SBM 2015-16) | Susi Industries | 1,04,000/- |
| 21 | Stainless Steel Tipper Body (2 Nos) சப்ளை செய்தல் (SBM 2015-16) | Susi Industries | 48,000/- |
| 22 | ஐயப்பன் நகரில் அமைந்துள்ள கதிர்வேல் தெருவில் தார் சாலை அமைக்கும் பணி (FSD 1%) | N.நடராஜன் | 22,500/- |
| 23 | SRP 2010–11 – Package II தார் சாலை அமைக்கும் பணி (FSD 1%) | N.நடராஜன் | 97,250/- |
| 24 | SRP 2010–11 – Package III தார் சாலை அமைக்கும் பணி | N.நடராஜன் | 1,23,790/- |
| 25 | SRP 2010–11 – Package II தார் சாலை அமைக்கும் பணி | N.நடராஜன் | 97,250/- |
| 26 | வார்டு எண்.22, சங்குசா பேட்டை சிறுபாலம் கட்டுதல் பணி | N.நடராஜன் | 12,000/-<br>4,000/-<br>16,000/- |
| 27 | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2013-2014 கீழ் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பொது கழிப்பிடம் கட்டுதல். | N.நடராஜன் | 15,000/- |
| 28 | தாமரை பள்ளம் தெரு அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | K.S.மணி எலட்ரிக்கல்ஸ் | 5,000/- |
| 29 | வார்டு எண்.3-ல் நியாய விலை கடை கட்டுதல் | K.S.மணி எலட்ரிக்கல்ஸ் | 5,000/- |
| 30 | IUDM உரக்கிடங்கிற்கு மின்சார வசதி செய்தல் | K.S.மணி எலட்ரிக்கல்ஸ் | 50,000/- |
| 31 | 4 Wheeler Tipper (13 Nos) | Sakthi Body Works | 1,04,000/- |
| 32 | தாயார் குளம் பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல் (FSD 1%) | S.ஏழுமலை | 8,500/- |
| 33 | மதுரா மோட்டூர் பகுதியில் பொது கழிப்பிடம் கட்டுதல் | S.ஏழுமலை | 8,500/- |
| 34 | வார்டு எண்.25, வெங்கடேசபாளையம் தும்பவனம் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | S. தேவராஜன் | 1,300/- |
| 35 | வார்டு எண்.19, பல்லவர்மேடு மயிலம் நகர் பகுதியில் (2. No) ஆழ்தளை குழாய் கிணறு மற்றும் தண்ணீர் தொட்டி அமைத்தல் | S. தேவராஜன் | 4,000/- |

| | | | |
|---|---|---|---|
| 36 | வார்டு எண்.21. Dr.P.S.சீனிவாசன் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக ஆழ்தளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் | S. தேவராஜன் | 4,500/- |
| 37 | காக்கரை தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி (FSD 5%) | V. பார்த்திபன் | 15,855/- |
| 38 | வார்டு எண்.15, திருமேற்றிலீஸ்வரர் கோயில் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | V. பார்த்திபன் | 18,485/- |
| 39 | வார்டு எண்.1, ஒலிமுகமது பேட்டை நகராட்சி ஆரம்ப பள்ளி பராமரிப்பு பணி | V. பார்த்திபன் | 18,500/- |
| 40 | வார்டு எண்.42, தேனம்பாக்கம் பகுதியில் புதிய கழிப்பிடம் கட்டுதல் பணி | V. பார்த்திபன் | 18,500/- |
| 41 | வார்டு எண்.45, காமாட்சி அவென்யூவில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் | A. செல்வக்குமார் | 2,000/- |
| 42 | வார்டு எண்.45, தாயார் குளம் மேட்டில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A. செல்வக்குமார் | 2,000/- |
| 43 | வார்டு எண்.45, விவேகானந்தர் நகரில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A. செல்வக்குமார் | 2,000/- |
| 44 | வார்டு எண்.49, சின்னையின் நகர் தார் சாலைஅமைத்தல் | A. செல்வக்குமார் | 16,500/- |
| 45 | வார்டு எண்.9, PTVS பள்ளிக்கு கூடுதல் இரண்டு வகுப்பறைகள் கட்டுதல் | A. செல்வக்குமார் | 6,000/- |
| 46 | வார்டு எண்.45, நேரு நகரில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A.தசரதன் | 2,000/- |
| 47 | வார்டு எண்.45, சத்தியா நகர் 4வது தெருவில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A.தசரதன் | 2,000/- |

| | | | |
|---|---|---|---|
| 48 | வார்டு எண்.45, வடிவேல் நகரில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A.தசரதன் | 2,000/- |
| 49 | வார்டு எண்.45, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A.தசரதன் | 2,000/- |
| 50 | வார்டு எண்.45, அண்ணா நகரில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A.தசரதன் | 2,000/- |
| 51 | வார்டு எண்.45, தும்பவனத்தில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A.தசரதன் | 2,000/- |
| 52 | வார்டு எண்.45, சதாவரம் இருளர் காலனியில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | A.தசரதன் | 2,000/- |
| 53 | வார்டு எண்.45, காமாட்சி அம்மன் அவென்யூ விடுபட்ட பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | A.தசரதன் | 6,000/- |
| 54 | வார்டு எண்.1, வரதப்பன் தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | A.சரவணன் | 2,400/- |
| 55 | வார்டு எண்.1, நெட்டேரி சாலையில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | A.சரவணன் | 2,400/- |
| 56 | வார்டு எண்.3-ல் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | P.R.குருமூர்த்தி | 3,000/- |
| 57 | வார்டு எண்.43, அஸ்திகிரி தெருவில் புதிய ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | P.R.குருமூர்த்தி | 3,500/- |
| 58 | வார்டு எண்.24, ரெட்டிப்பேட்டை ஒத்தவாடைத் தெருவில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | S. சரோஜா | 1,200/- |
| 59 | வார்டு எண்.21, காஞ்சிபுரம் பேருந்து நிலையம் நுழைவு வாயில்அமைத்தல் பணி | M. ஸ்ரீநாத் | 24,250/- |
| 60 | வார்டு எண்.30 தாயார்குளம் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் சிறுமின்விசை பம்பு அமைத்தல் | S.K.லோகநாதன் | 1,300/- |
| 61 | 45-வது வார்டு வடிவேல் நகரில் கால்வாய் அமைத்தல் | S.K.லோகநாதன் | 3,000/- |
| 62 | A.K.T நகராட்சி துவக்கப்பள்ளியில் சமையலறையுடன் கூடிய இருப்பறை கட்டிடம் கட்டுதல். | S.K.லோகநாதன் | 2,500/- |
| 63 | 42-வது வார்டு தேனம்பாக்கம் நகராட்சி தொடக்கப்பள்ளிக்கு கழிப்பறை அமைத்தல் | S.K.லோகநாதன் | 3,000/- |
| 64 | வார்டு எண்.51-ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் PVC Syntex Tank அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | S.K.லோகநாதன் | 400/- |

| | | | |
|---|---|---|---|
| 65 | 38-வது வார்டு C.S.செட்டி தெருவில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறு மின்விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைத்தல் | S.K.லோகநாதன் | 2,260/- |
| 66 | 47-வது வார்டு சிவபுரம் உத்திரமேரூர் சாலையில் ஏற்கனவே அமைந்துள்ள அடிபம்பினை அகற்றி புதிதாக சிறுமின் விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைத்தல் | S.K.லோகநாதன் | 1,200/- |
| 67 | 49-வது வார்டு செவிலிமேடு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிக்கு குடிநீர் வழங்கும் பாலாற்று கிணற்றிலிருந்து மேட்டு காலணி பகுதி மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு இணைப்பு மாற்றி அமைத்தல் | S.K.லோகநாதன் | 1,000/- |
| 68 | 34-வது வார்டு AKT நகராட்சி தொடக்கப்பள்ளிக்கு கழிப்பிட வசதி அமைத்தல் | S.K.லோகநாதன் | 3,000/- |
| 69 | 16-வது வார்டு CSM தோப்பு மேட்டு பகுதி பொதுக் கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல் | S.K.லோகநாதன் | 2,000/- |
| 70 | சேதுராயர் தெரு, திருச்சோலை தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | S.K.லோகநாதன் | 3,600/- |
| 71 | 48-வது வார்டு எல்லப்பா நகர் முதல் தெரு மற்றும் காமாட்சியம்மன் காலணி K.S பார்த்தசாரதி தெருவில் சிறுமின் விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி வசதி செய்தல் | S.K.லோகநாதன் | 2,600/- |
| 72 | 47-வது வார்டு ராஜன் நகர், அப்பாவு நகர், பேராசியர்நகர், முல்லை நகர், தயாளன் நகர், சர்வோதயா நகர், கண்ணிகிபுர. பகுதிகளில் குடிநீர் விநியோகம் பழுதடைந்த PVC குழாய்களை மாற்றியமைத்தல் | S.K.லோகநாதன் | 4,000/- |
| 73 | 13-வது வார்டு உப்பரிகுளம் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறு மின்விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைத்தல் | S.K.லோகநாதன் | 2,250/- |
| 74 | 12-வது வார்டு ஸ்ரீ சந்தவெளியம்மன் கோயில் பின்புறம் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறு மின் விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைத்தல் | B.நீலகண்டன் | 2,250/- |
| 75 | 41-வது வார்டு முருகன் குடியிருப்பு புதுநகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் சிறு மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி ஏற்படுத்துதல் | B.நீலகண்டன் | 5,000/- |

| | | | |
|---|---|---|---|
| 76 | 17-வது வார்டு மண்டபம் தெரு நீர் தேக்கத் தொட்டிக்கு கிழக்குபுரம் மடம் தெரு சந்திப்பு முதல் சேலை ராமசாமி தெரு சந்திப்பு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் | B.நீலகண்டன் | 3,000/- |
| 77 | வேகவதி நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள நகராட்சி பணியாளர் குடியிருப்புகளில் மராமத்து பணிகள் செய்தல் | B.நீலகண்டன் | 780/-<br>4900/-<br>20/-<br>8800/-<br>9,500/- |
| 78 | 31-வது வார்டு அன்னை சாரதா அவென்யூக்கு புதை வடிகால் மற்றும் சாலைவசதி செய்தல் | B.நீலகண்டன் | 6,000/- |
| 79 | 46-வது வார்டு சின்ன ஐயங்குளம் பகுதியில் இரண்டு எண்ணிக்கை புதியதாக ஆழ்துளைகுழாய் கிணறு மற்றும் சிறு மின்விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி அமைத்தல் | B.நீலகண்டன் | 5,000/- |
| 80 | 31-வது வார்டு பாபுகான் தோட்டம் விடுபட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | B.நீலகண்டன் | 7,000/- |
| 81 | அண்ணா அரங்க வளாகத்தில் உணவுகூடத்தில் உள்ள பழுதடைந்த மின் விசிறிகள் மற்றும் மின் விளக்குகள் மாற்றியமைத்தல், அறங்கமுன்புறம் உள்ள வாகன நிறுத்துமிடத்திற்கு தரை தளம் மற்றும் மேற்கூரை அமைத்தல் | B.நீலகண்டன் | 5,000/- |
| 82 | நகராட்சி பேருந்து நிலையத்தில் தாய்மார்களுக்கான பாலூட்டும் அறை அமைத்தல் கழிப்பறைவசதி மற்றும் மின்வசதி ஏற்படுத்துதல் | B.நீலகண்டன் | 2,500/- |
| 83 | 36-வது வார்டுக்குட்பட்ட பகுதியில் சாலைகள் சந்திப்பின் ஓரங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துதல் | B.நீலகண்டன் | 4,250/- |
| 84 | 35-வது வார்டு நாகலுத்து மந்தவெளி கோயில் தெருவில் சிறுமின் விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி வசதி செய்தல் | B.நீலகண்டன் | 2,250/-<br>250/-<br>2,500/- |
| 85 | பேருந்து நிலைய சிமெண்ட் தளம் மற்றும் தார் தளம் செப்பனிடுதல் பணி | B.நீலகண்டன் | 7,000/- |
| 86 | 47-வது வார்டு பேராசிரியர் நகர் - 2 பகுதியில் கிராவல் நிரப்பி சாலை சீர் செய்தல் | B.நீலகண்டன் | 500/- |
| 87 | 34-வது வார்டு பாவாபேட்டை டபன் தெருவில் உள்ள பொது கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | B.நீலகண்டன் | 1,500/- |

| | | | |
|---|---|---|---|
| 88 | 34-வது வார்டு சிங்கபெருமாள் கோயில் தெற்க மாட வீதியில் புதிய ஆழ்துளை குழாய் கிணறு | B.நீலகண்டன் | 2,250/- |
| 89 | 36-வது வார்டு முல்லாபாளையம் தெருவில் சிறு மின் விசை பம்புடன் கூடிய தண்ணீர் தொட்டி வசதி செய்தல் | B.நீலகண்டன் | 2,250/- |

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 1143/2020/இ1)**

**தீர்மான எண்:- 166** அனுமதி **அளிக்கப்பட்டது**

**32.** காஞ்சிபுரம் பெருநகராட்சி வரவு செலவு திட்டம் பொது சுகாதாரப் பிரிவு ஆண்டு வரவு செலவு பட்டியலில் செலவு கணக்கு தலைப்புகள் கணக்கு தலைப்பு எண்.2305302 வாகன பராமரிப்பு செலவுக்கு இதன் தலைப்புக்கு 2020-21-க்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செலவினத்திற்கு ஏற்கனவே தோராயமாக 3000000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்து வாகன சம்மந்தப்பட்ட செலவினத்திற்கு செலவிடப்பட்டது. மேலும் கூடுதலாக ரூ.5000000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**.:–

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**தீர்மான எண்:- 167** அனுமதி **அளிக்கப்பட்டது**

**33.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் விதமாகவும் பொது மக்கள் அதிகம் கூடுவதை தடுத்தல், சமூக இடைவெளி கடைபிடித்தல் தொடர்பாக வையாவூர் பகுதியில் தற்காலிக கடைகள் அமைத்தல் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள், கட்டுப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு தடுப்புகள் அமைத்தல் போன்ற பணிகளுக்காக பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளக்கூடிய பணிக்களுக்கான செலவினங்கள் மேற்கொள்வதற்கும் மற்றும் இச்செலவினங்களுக்காக புதிய கணக்கு முறையில் ஒதுக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்ட செலவின தலைப்பின் கீழ் 2020-21-ம் ஆண்டு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | கணக்கு எண் | கணக்கு தலைப்பு | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2502004 | Health Disaster Relief Programme | 2,00,00,000/- |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.3982/2020/இ1)**

**தீர்மான எண்:- 168** அனுமதி **அளிக்கப்பட்டது**

**34.** காஞ்சிபுரம் பெருநகராட்சி பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் கிருமி காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளிலும் உள்ள பொதுமக்கள் கூடுமிடங்களான மருத்துவமனைகள், பள்ளிகூடங்கள், கல்லூரிகள், காய்கறி சந்தைகள், உணவகங்கள், வணிக வளாகப் பகுதிகளில் லைசால் கிருமி நாசினி தெளித்து இந்நோய் பரவாமல் வைரஸ் தாக்குதலில் இருந்து தற்காத்து கொள்ளவும் சுகாதார பணிகளுக்ககாகவும் Lyson-2700 லிட்டர் 12.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதமாக ஒரு லிட்டர் ரூ.280/- + GST (18%) வழங்கிய ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எண் 30/29.05.2020 பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி வாங்கப்பட்ட கிருமி நாசினி மருந்து பற்றாக்குறையாக உள்ளது எனவும் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருவதால் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காஞ்சிபுரம் ஆகியோர் ஆய்வுகூட்டங்களில் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்ட பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 5 முறை லைசால் தெளிக்க அறிவுறுத்தியதின் அடிப்படையில் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் தமது 13.08.2020-ம் தேதிய குறிப்பில் கேட்டுள்ளதை கருதி மேலும் 2700 லிட்டர் - வாங்கிக் கொள்ளவும், ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த விலை விகிதம் ரூ.280/- + GST (18%) வழங்கிய திருவாளர், ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திடமே

வாங்கிக் கொள்ள பணி உத்தரவு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.9.00 இலட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று திருவாளர் ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் ஏற்றுமதியாளர் (ம) விற்பனையாளர், திண்டுக்கல் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4110/2020/எச்1)

**தீர்மானம் எண்.169** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

35. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதியின்கீழ் கீழ்க்காணம் பணிகளை மேற்கொள்ள 30.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.) இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | 51-வது வார்டு SMG நகர் பகுதிக்கு புதியதாக 3” & 4” PVC குடிநீர் குழாய்கள் அமைத்தல் பணி | 8.00 | K. ஆறுமுகம் | 2.06% | - |
| | | | M/s A.V. Enterprises | - | **0.13 %** |

**அலுவலக குறிப்பு :-**

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s A.V. Enterprises நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1143/2020/இ1)

**தீர்மானம் எண்.170** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

36. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதியின்கீழ் கீழ்க்காணம் பணிகளை மேற்கொள்ள 12.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.) இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.51, விவேகானந்தா நகர் பகுதியில் அமைந்துள்ள பூங்காவினை சுத்தம் செய்து, சுற்றுசுவர் மற்றும் பேவர் பிளாக் கொண்டு நடைபாதை அமைத்தல். | 6.00 | K. ஆறுமுகம் | 3.17% | - |
| | | | M/s A.V. Enterprises | - | **0.03 %** |

**அலுவலக குறிப்பு :-**

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s A.V. Enterprises நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1143/2020/இ1)

**தீர்மானம் எண்.171** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

37. காஞ்சிபுரம் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு திட்ட பணிகளில் நகரப் பகுதிகளில் உருவாகும் மக்கும் திடக்கழிவுகளை நத்தப்பேட்டை பசுமை உரக்குடிலிலும், செவிலிமேடு பசுமை உரக்குடிலிலும் உரமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் பணிபுரியும் 26 DBC பணியாளர்கள் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களையும், துப்புரவு பணிக்கு தேவையான தளவாடப் பொருட்களை வாங்கிக் கொள்ள நகர மன்ற தீர்மான ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் 17.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | தளவாடப் பொருட்களின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்கள் | |
|---|---|---|---|
| | | ஸ்ரீபெரும்புதுர் எழுதுபொருள், அச்சடிப்பு தொழில் கூட்டுறவு சங்கம் லிட், (GST 18%) தனி | காஞ்சிபுரம் எழுதுபொருள், அச்சடிப்பு தொழில் கூட்டுறவு சங்கம் லிட் |
| 1 | பிக்காசு | 500.00 | 750.00 |
| 2 | சவுல் | 450.00 | 550.00 |
| 3 | அன்னக்கூடை அலுமினியம் | 390.00 | 455.00 |
| 4 | கையுறை | 70.00 | 90.00 |
| 5 | முககவசம் | 4.00 | 10.00 |
| 6 | தென்னந்துடப்பம் | 40.00 | 50.00 |
| 7 | மண்வெட்டி | 370.00 | 500.00 |
| 8 | மலாரம் | 400.00 | 400.00 |
| 9 | மண்தள்ளும் தகடு | 50.00 | 60.00 |
| 10 | ஒளிரும் மேலங்கி | 300.00 | 400.00 |
| 11 | பிளாஸ்டிக் குப்பை கலன் | 1100.00 | 1250.00 |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள திருவாளர். ஸ்ரீபெரும்புதுர் எழுதுபொருள் அச்சடிப்பு தொழில் கூட்டுறவு சங்கம் லிட் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

பணி உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.4330/2020/எச்1

**தீர்மானம் எண்.172** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

38. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் UTIS புதிய கணக்கு தலைப்பு எண்.2502004 உருவாக்கப்பட்டு (Health Disaster Relief) இதன் தலைப்புக்கு 2020 -21 - க்கான வரவு செலவுத் திட்டத்தின்கீழ் கொரோனா சம்மந்தப்பட்ட செலவினத்திற்கு ஏற்கனவே தோராயமாக 2,00,00,000/- நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (ந.ம.தீ.எண்கள்.1/30.04.2020, 26/29.05.2020)

மேலும் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்து கொரோனா சம்மந்தப்பட்ட செலவினத்திற்கு செலவிடப்பட்டது. மேலும் கூடுதலாக ரூ.2,00,00,000/- (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.4016/2020/எச்1)

**தீர்மானம் எண்.173** அனுமதி அளிக்கப்பட்டது.

**39.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட 51-வது வார்டு ராமசாமி நகர் மற்றும் என்.ஜி.ஓ. நகர் பாரதியார் தெருவின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள கைப்பம்பினை அகற்றி அதில் மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்தி தருமாறும், இராமசாமி நகரில் மழைநீர் வடிகால்வாய் வசதி செய்து தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கையின்பேரில், மேற்படி கைப்பம்பினை அகற்றி அதில் மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்தவும் மற்றும் அப்பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதி வழங்கலாம்** **(ந.க.எண்.1143/2020/இ1)**

**தீர்மானம் எண்.174** அனுமதி அளிக்கப்பட்டது

**40.** காஞ்சிபுரம் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் பதிவு எண். TN 21 AL5848 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. எனேவ மேற்படி பணிகளை செய்வதற்கும், அதற்காக ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**60,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.175** அனுமதி அளிக்கப்பட்டது

நகராட்சி அலுவலகம்.
காஞ்சிபுரம்.
**நாள்:– 31.08.2020.**

(ஒம்) ரா. மகேஸ்வரி,
தனி அலுவலர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்
காஞ்சிபுரம் பெருநகராட்சி.